# இலங்கை மத்திய வங்கி -2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) ரூபா 3,535,285 தொகையான இரண்டு தொங்கல் கணக்கு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெள்ளை அரங்க கட்டிடத்தின் காணியின் பெறுமதி எல்கேஏஎஸ் 16 இன்படி காணயாக கணக்கிடுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலைகளாக கணக்கிடப்பட்டிருந்தது. வெள்ளை அரங்க கட்டிடத்தின் காணியின் பெறுமதி ரூபா 400 மில்லியனாக இருந்தது.

(இ) நாணய சட்ட அதிகாரச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின்படி, மத்திய வங்கியால் உழைத்த இலாபங்கள் பகிர்வுகள் மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய ஒதுக்கீடுகள் மற்றும் தீர்ப்பனவு செய்த பின்னர் இலங்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், நாணய சட்ட அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டிற்கான இலாபத்திலிருந்து முற்பண கொடுப்பனவுகளாக 2012 யூன், ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் பொதுத் திறைசேரிக்கு ரூபா 33 பில்லியன் அனுப்பப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களின்படி, ரூபா 25.2 பில்லியன் தேறிய வெளிநாட்டு மீள்மதிப்பீட்டு இலாபத்தை கணக்கிற்கு எடுத்த பின்னர் இலங்கை மத்திய வங்கி ரூபா 66.2 பில்லியன் இலாபத்தை உழைத்திருந்தது. ஆதற்கு மேலாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டியவைகளாக ரூபா 1.35 பில்லியன் இருந்தது. இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் எனக்கு தெரிவித்ததாவது,

(i) ''கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் இலாப மாற்றங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது கணக்காய்வு செய்யப்பட்ட தேறிய இலாபத்தை மாற்றுவதற்காக நாணய சட்ட அதிகாரச்சட்டத்தில் குறிப்பித்தக்கவாறு எல்லை எதுவும் இல்லலை.

(ii) அவைகள் காலாண்டு அடிப்படையில் தேறிய இலாபத்தில் குறித்த வெளிவாரி கணக்காய்வு ஒழுங்கு செய்யப்படுவதுடன் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் மொத்த இலாப மாற்றங்களை இறுதியாக்குவதற்கு அமைய தேறிய அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட காலாண்டு இலாபங்களிற்கு, வடயம் போன்ற முன்கூட்டிய இலாப மாற்றங்களின் தாக்கம் இருக்க வேண்டும்.''

வெளிநாட்டு நாணயங்கள் 15 சதவீதத்தை விட குறைவாக இல்லாதிருக்க வேண்டும். பின்னர், இலங்கை மத்திய வங்கியினுடைய ஐந்தொகையினை வலுப்படுத்தும் நோக்கத்துடனும் நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டும் நாணயச் சபை 2010 திசெம்பர் 13 இல் 100 சதவீதத்திற்கு இந்த விகிதத்தை அதிகரிப்பதற்கு தீர்மானித்தது. எவ்வாறாயினும், நாணயச் சபையால் தீர்மானித்திருந்த மேற்குறிப்பிட்ட விகிதம் மீளாய்வாண்டின் போது இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்டிருக்கவில்லை. இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட விகிதம் வேண்டப்பட்ட 100 சதவீதத்திற்கு எதிராக 51 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான வீச்சில் இருந்தன. ''இந்த மூலதன விகிதங்கள் நாணயச் சட்ட அத்காரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு 15 சதவீத விகிதத்திற்கு மேலாக மூலதன போதிய தன்மைக்கான சர்வதேச மேற்பார்வைக்காக தன்னார்வ எல்லையாக காலத்திற்கு காலம் நாணயச் சபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2014 அரசாங்க பாதீட்டில் பிரேரிக்கப்பட்டவாறு ரூபா 50 பில்லியனிற்கு இலங்கை மத்திய வங்கியின் மூலதனத்தை அதிகரிக்கும் நோக்கில் நாணயச் சபை புதிய புத்திசாதுரிய நிலை சூழல் காரணமாக மேலதிக மூலதனம் சந்தர்ப்பங்கள் காரணமாக தேவையேற்பட்டால் ஒவ்வொரு ஆண்டு நிதிக்கூற்றுக்களையும் அங்கீகரிக்கும் காலத்தில் அத்தகைய வருடாந்த விகிதத்தை கருத்திற்கொண்டு மேற்குறிப்பிட்ட தன்னார்வ விகிதத்தை மீள பெறுவதற்கும் தீர்மானித்தது. மேற்குறிப்பிட்ட பாதீட்டு பிரேரணையை அமுலாக்குவதற்காக நாயண சட்ட அதிகாரசட்டத்திற்கான வரைவு திருத்தம் ஏற்கனவே நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது'' என்று இலங்கை மத்திய வங்கி விளக்கமளித்திருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (சீபிசீ) சார்பில் சட்டமா அத்பர் நாயகத்தால் செய்யப்பட்ட வேண்டுகை மீது முன்னைய ஆண்டுகளில் வெளிநாட்டு சட்டத்தரணிகளிற்கு சட்டக் கட்டணங்களாக இலங்கை மத்திய வங்கியால் செலுத்தப்பட்ட ரூபா 480.8 மில்லியன் தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. ‘‘2013 இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 333.1 மில்லியனாக இருந்ததென’’ இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் எனக்கு தெரிவித்திருந்தார்.

(ஆ) ரூபா 2,739,898 தொகையான மீளளிக்கப்பட வேண்டிய கேள்வி வைப்புக்கள், நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் ஒப்பந்த பிடிகாசு என்பன கட்டுப்பாட்டுக் கணக்கில் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. எவ்வாறாயினும், இம்மீதிகள் வழங்குநர்களால் கோரப்பட்டோ அல்லது மீளாய்வாண்டு இறுதிவரையிலும் இலங்கை மத்திய வங்கியால் வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டோ இருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான இலங்கை மத்திய வங்கயின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 46,830 மில்லியன் நேரொத்த தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 66,209 மில்லியன் தேறிய இலாபத்தினை விளைந்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 19,379 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டின் ரூபா 3,577 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 25,182 மில்லியன் தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலபம் மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 227 மில்லியன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது 24,866 மில்லியன் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம் என்பன மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபத்தின் அதிகரிப்பிற்கான காரணங்களாக இருந்தன.

## 2.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய மொத்தச் செயற்பாட்டு வருமானம், முன்னைய ஆண்டின் ரூபா 3.5 பில்லியன் தொகையான தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலபம் உள்ளடங்கலாக ரூபா 53 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 25.1 பில்லியன் தொகையான தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலபம் உள்ளடங்கலாக, தேறிய மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 43 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 75.9 பில்லியனாக இருந்தது. அதேநேரம் மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினம் என்பன உள்ளங்கலாக செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூபா 5.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 7.1 பில்லியனாக இருந்தது. ஆதலால், 29 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போதான இலங்கை மத்திய வங்கியின் வருமானம் மற்றும் செலவின மாற்றங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | 2012 | 2011 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | ரூபா (பில்) | ரூபா (பில்) | ரூபா (பில்) | % |
| வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் | 28.6 | 52.4 | (23.8) | (45) |
| வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்களிலிருந்தான செலவினம் | 3.7 | 3.9 | (0.2) | (5) |
| வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலபம் | 25.1 | 3.5 | 21.6 | 617 |
| உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் | 24.8 | 0.2 | 24.6 | 12,300 |
| செயற்பாட்டுச் செலவினம் | 7.1 | 5.5 | 1.6 | 29 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | 66.2 | 46.8 | 19.4 | 41 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானத்தின் அதிகரிப்பு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டிய போதிலும் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 45 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இலங்கையில் நிதி முறைமை திடத்தன்மை பேணுதல் மீதான நடவடிக்கைகள்

#### 3.1.1 அனுமதிக்கப்படாத நிதி வியாபாரத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து, நாணயச் சபை மற்றும் பொது முயற்சிகள் குழு (சீஓபிஈ) என்பவற்றல் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களின் அடிப்படையில் அனுமதிக்கப்படாத நிதி வியாபாரம் தொடர்பில் புலனாய்வுகள் ஊடாக வங்கியல்லா நிதி நிறுவனங்களின் (எஸ்என்பீஎவ்ஐ) மேற்பார்வை நடாத்தப்பட்டிருந்தன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட 65 புலனாய்வுகளில் பின்வரும் முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாற்பத்தி ஆறு புலனாய்வுகள் முடிக்கப்பட்டிருந்தன.

(ii) மூன்று புலனாய்வுகள் மேலும் நடவடிக்கைகளிற்காக இருந்ததுடன் சட்ட நடவடிக்கைக்காக 01 புலனாய்வுகள் சட்டமா அதிபர் நாயகத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

(iii) மேலதிகமாக 06 வழக்குகளும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. சட்டமா அதிபர் நாயகத்தின் ஆலோசனை பெறப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பில் மேலும் விளக்கங்கள் எதிர்பார்க்கப்பட்டிருந்தன.

(iv) இருபத்தி நான்கு வழக்குகள் புலனாய்வுகளின் கீழ் இருந்தன.

வழக்குகளின் அதிகமானளவு புலனாய்வுகள் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டிருந்ததுடன் 37 சதவீதமானவை தொடர்ந்து நடாத்தப்படுகினறன. அனுமதிக்கப்படாத நிதி நிறுவனங்களிற்கு எதிராக சாத்தியமானளவு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் மெதுவான புலனாய்வு முன்னேற்றங்கள் எதிர்மறையாக பாதித்திருந்தன. ஆதலால், தொடரும் புலனாய்வுச் செயற்பாடுகள் விளைவற்றவையாகத் தெரிகின்றன.

(ஆ) மேலும், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் நிதிக் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் வகையில் நிதி வியாபாரம் செய்கின்ற நிறுவனமாக கம்பனியின் பெயர் மற்றும் முகவரியை புதினப்பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு எஸ்என்பீஎவ்ஐ யின் பணிப்பாளர் நெறிப்படுத்தியிருந்ததுடன் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடங்கியிருந்தார். இருந்த

போதிலும், 2013 செப்தெம்பர் இறுதிவரை நாணயச் சபையால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் கம்பனி இணங்கிருக்காத போதிலும் சொல்லப்பட்ட கம்பனிக்கு எதிராக மேலும் நடவடிக்கைகள் எஸ்என்பீஎவ்ஜ ஆல் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் வெளிப்பட்டது.

(இ) இலங்கையில் நிதி முறைமை திடத்தன்மைக்கான நுண் நிதி நிறுவனங்களின் (எம்எவ்ஜஎஸ்) பணிகளையும் சிறு நிதித் துறைக்காக ஒழுங்குபடுத்தும் மற்றும் மேற்பார்வை பொறிமுறையை தாபிப்பதற்கான தேவை, எப்படி அடையாளம் கண்டிருந்தமையால் நாணயச் சபை சிறு நிதி நிறுவனங்களின் மேற்பார்வைக்காக சட்டக் கட்டமைப்பை வழங்கும் நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட வரைவு சிறு நிதி நிறுவன ஒழுங்குபடுத்தும் அதிகாரச் சட்டத்தை அங்கீகரிப்பதற்கு 2006 பெப்ரவரி 17 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்திருந்தது. மேலும், நாணயச் சபை இலங்கையில் சிறு நிதி நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக்காக சுதந்திரமான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரசபையை தாபிப்பதை 2009 ஆகஸ்ட் 17 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அங்கீகரித்தது. மேற்குறிப்பிட்ட தீர்மானங்களின் அடிப்படையில், வரைவு சிறு நிதி மசோதா இறுதியாக்கப்பட்டதுடன் வரைவு மசோதா பாராளுமன்றத்திற்கு மசோதாவை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2013 செப்தெம்பர் மாதத்தில், சட்டமியற்றல் மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் நடைபெற்ற கலந்துரையாடலினால் அமைச்சரவை உப குழுவால் செய்யப்பட்ட விதப்புரைகள் காரணமாக, இலங்கை மத்திய வங்கி பதலீட்டு, பிரமாணப்படுத்தல் கட்டமைப்பொன்றை அமுலாக்கும் வரை மசோதாவை சட்டமாக்காமல் வைத்திருப்பதற்கு தீர்மானித்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மசோதவை வைத்திருப்பதற்கான காரணமானது எம்எவ்ஜஎஸ் உம் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரவரம்பிற்குள் வந்தால் என்பீஎவ்ஜஎஸ் இன் திடநிலையை பெணுவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகளவு கடினமானதென இருக்குமென்பதாகும். எவ்வாறாயினும், நாணயச் சட்ட அத்காரச் சட்டத்தின் பிரகாரம், இலங்கை மத்தி வங்கியானது நாட்டில் நிதி முறைமை ஸ்திரத்தன்மையை பேணும் நோக்கில் அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பொறுப்புடையதாகும். எஸ்என்பீஎவ்ஜ திணைக்களம் உத்தேசிக்கப்பட்ட சிறு நிதி மசோதாவின் கீழ் அத்தகைய வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கில் அனுமதிக்கப்படாத நிதி வியாபார நிறுவனங்களிற்கு எதிராக நடாத்தப்பட்ட புலனாய்வுகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்ததெனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் கிராமிய அபிவிருத்தி திணைக்களம் கிராமப் பகுதியிலுள்ள சிறு நிதியிடல் முறைமையின் அபிவிருத்திகளில் அதிகளவு அமுத்தம் கொடுத்ததுடன் நாட்டில் சிறு நிதி வியாபாரம் தொடங்குவது

தொடர்பில் அதிகரிக்கும் போக்கு இருந்தது. அத்தகைய அடித்தளத்தில், 07 ஆண்டுகளிற்கு மேலாக இறுதி கட்டத்தை அடைந்த பின்னர் உத்தேசிக்கப்பட்ட மசோதா சட்டமியற்றாமல் தடுத்து வைத்திருந்தமை கேள்விக்குரியதாக உள்ளது. எவ்வாறாயினும், ''அத்தகைய புதிய மசோதாவின் சட்ட செயன்முறை உரிய அதிகாரங்கள் ஊடாக அதன் சாதாரண வழக்கத்தை எடுக்கின்றதுடன் மத்திய வங்கி சட்டமியற்றலைக் அங்கீகரிக்கும் இக்கட்டத்தில் குறிப்பான கட்டுப்பாட்டை வைத்திருக்கவில்லை.'' என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்தது.

### 3.1.2 தவறிய நிதிக்கம்பனிகள் மீதான மேற்பார்வை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாணயச் சபையானது ரூபா 6.1 பில்லியன் தொகையான நிலுவையாகவிருந்த கடன்களையும் 1998 முதல் 2000 வரையான காலத்தின் போது 13 காலாவதியான நிதிக் கம்பனிகளிற்கு வழங்கியிருந்த மீள்நிதி வசதிகளையும் பதிவழிப்பதற்கு 2011 மார்ச் 21 இல் அனுமதியை வழங்கியிருந்தது. பின்னர் நாணயச் சபையானது கணக்கொழிப்பு நடைமுறையிலிருந்த ஆறு தவறிய கம்பனிகளிலிருந்து அக்கம்பனிகள் பங்கீடுகளைச் செய்யும் போது கணக்கொழிப்பு பெறுகைகளிலிருந்து கோருவதற்கும் 2011 செப்தெம்பர் 01 இல் தீர்மானித்தது. எவ்வாறாயினும், 2013 செப்தெம்பர் மாத இறுதிவரை இலங்கை மத்திய வங்கியால் ரூபா 18.4 மில்லியன் தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்தது. மேலும், அக்கம்பனிகளின் பணிப்பாளர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொது முயற்சிகள் குழு நெறிப்படுத்தியிருந்த போதிலும் அத்தகைய நடவடிக்கை 2013 செப்தெம்பர் மாத இறுதிவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் பின்வருமாறு அறிவித்திருந்தார் ''இலங்கை மத்திய வங்கி சட்ட மா அதிபர் நாயகத்திற்கு தவறிய நிதிக் கம்பனிகள் மீதான சரியான முன்னெச்சரிக்கை அறிக்கைகளை சமர்ப்பித்திருந்ததுடன் ஞாபகமூட்டல்களையும் அனுப்பியிருந்தது. 1988/89 இல், நிதிக் கம்பனிகளிற்கான ஒழுங்குபடுத்தும் பொறிமுறைக்காக குறித்த சட்ட வரைமுறை எதுவும் இருக்கவில்லை. பாதகமான நிதிப் பற்றாக்குறை நேராது தடுப்பதற்காக மத்திய வங்கியின் மரபுரீதியான விசாலமான நிதி/ பொருளாதார ஸ்திரத்தன்மை பொறுப்புக்கள் மற்றும் அந்நேரத்தில் நிலவிய நிதியை வைப்புச் செய்தோர் நம்பகத்தன்மை, நிதி மற்றும் பொருளாதார முறைமை, வழங்கப்பட்ட குறித்த சூழ்நிலைகள் /

காரணங்களின் இழப்பு என்பவற்றன் நோக்கில் தேசிய அக்கறையில் நிதிக் கம்பனிகள் மீள்வதற்கு மீள்நிதி வசதிகள் உள்ளடங்கலாக பல நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இலங்கை மத்திய வங்கியானது அத்தகைய தவறிய நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு நிதிக் கம்பனிகள் அதிகாரச் சட்டம் குறித்த அதிகாரங்களை வைத்திருக்கவில்லை. முன்னரே ஒழுங்குபடுத்தும் பொறிமுறை வைத்திருக்காமையால், சாதாரண சட்டங்களின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வெண்டியிருந்தது. ஆகவே, சட்டமா அதிபர் நாயகத்தால் அத்தகைய சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வேண்டப்பட்ட சட்ட ஆவணச் சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும், இந்த விடயத்தில் ஈடுபட்டிருந்த பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகததர்கள் தற்போது உயிருடன் இருக்கும் சாத்தியமில்லை அல்லது தேடிக்கண்டுபிடிக்க முடியாதிருந்தது. சட்டமா அதிபர் நாயகத்தால் அத்தகைய சட்ட இடையூறுகள் காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, சட்ட நடவடிக்கை தொடர்வது இக்கட்டத்தில் சாத்தியமற்றதுடன் அத்தகைய முயற்சிகள் பொது நிதிக்கான கிரயமாக முடியும்.”

(ஆ) ரூபா 3.5 பில்லியன் தொகையான வைப்பாளர்களுடைய பொறுப்புக்களை வைத்திருந்த நிதிக் கம்பனியொன்று மீளாய்வாண்டின் போது முறிவடைந்திருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கம்பனியின் மேற்பார்வை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2009 ஆம் ஆண்டில், வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் (டிஎஸ்என்பீஎவ்ஐ) மேற்பார்வை திணைக்களத்தால் புலனாய்வுகள் நடாத்தப்பட்டது. எவ்வாறாயினும், புலனாய்வுகள் தொடர்பான கோவை வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தால் தவறவிடப்பட்டிருந்ததுடன் நாணயச் சபைக்கான அறிக்கை தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டில் இன்னொரு புலனாய்வு நடாத்தப்பட்டிருந்தது. நட்ட மற்றும் ஐயக்கடனிற்கான ஏற்பாடு தொடர்பான விடயங்கள், வேண்டப்பட்ட திரவத்தன்மைச் சொத்துக்களின் பேணுகை, திரண்ட வட்டியை வருமானமாக எடுத்தல், தனிநபர் கடன்பெறல் மற்றும் அறிக்கையிடல் வேண்டுகைகள் எல்லை மீறல், தவறான காசு மற்றும் வங்கி மீதிகளின் அறிக்கையிடல் போன்றன நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்தக்

கம்பனிக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பின்னர் 2012 நவம்பர் மாதத்தின் போதும் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் பாரதூரமான நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன. குறிப்பாக, எதிர்மறை சொத்து அடிப்படை பேணியமை ரூபா 632.38 மில்லியன் தொகையான தொடர்புபட்ட தரப்பு கொடுக்கல் வாங்கல்கள், தொகுதி தலைவர் சார்பில் பங்குகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 48.45 மில்லியன் தொகையான ஆரம்ப பொது மக்கள் தேவையிலிருந்து பெறப்பட்ட நிதிகளின் பயன்பாடு, அண்ணளவான ரூபா 228.6 மில்லியன் போலிச் சொத்துக்களின் கணக்கீடு, ரூபா 18.28 மில்லியன் தொகையான மிகையான நிலையான வைப்பு வட்டிகளின் கொடுப்பனவு போன்றன அறிக்கையிடப்பட்டன.

(iv) மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில், நாணயச் சபை பல நடவடிக்கைகளை எண்ணிக்கை எடுப்பதற்கு, குறிப்பாக கவனம் வழங்கலுக்குட்பட்ட, ஐயத்திற்கிடமான நிதிகளின் துஷ்பிரயோகங்கள் மீது பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை தாக்கல் செய்வதற்கும், தாய் கம்பனியாலும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்புடைய தரப்பினருக்கு அறிவிப்பதற்கும், சகல பணிப்பாளர்கள் மற்றும் அவர்களுடைய சுய விருப்பத்தின் அடிப்படையில் நிமிக்கப்பட்ட புதிய பணிப்பாளர்களின் வேதனங்களைக் குறைப்பதற்கும், மற்றும் 2011 இன் நிதி வியாபார அதிகாரச் சட்டத்தின் 25(1)(எவ்) ஆம் பிரிவின் கீழ் முகாமைசெய்கின்ற முகவராக இன்னொரு நிதிக் கம்பனியை நியமிப்பதற்கும் நெறிப்படுத்தியிருந்தது.

(v) 2012 நவம்பர் மாதத்தில் டிஎஸ்என்பீஎவ்ஜ ஆல் மேற்குறிப்பிட்ட விடயங்களை அறிக்கையிட முன்னர், சுதந்திரமான கணக்காய்வாளர்களும் 2009 ஆம் ஆண்டிலிருந்து டிஎஸ்என்பீஎவ்ஜ ஆல் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களிலிருந்து விலகும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும் அறிக்கையிட்டிருந்தமை குறிப்பாக, ரூபா 1,500 மில்லியனிற்கு மேலாக தாய் கம்பனியில் முதலீடு செய்தமை, பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள், திரவச் சொத்து வேண்டுகைகளுடன் இணங்காமை மற்றும் இலங்கை அரசாங்க திறைசேரி உண்டியல்கள்

மற்றும் பிணையங்கள் என்பவற்றில் முதலீடு செய்யும் வேண்டுகை மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்கள், மற்றும் நட்ட மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு போன்றன சுட்டிக்காட்டப்பட்டன.

## 3.2 பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள்

விவசாயம், சிறிய மற்றும் நடுத்தர மட்ட முயற்சியாளர்கள் மற்றும் சிறு நிதி போன்ற அத்தகைய பல்வேறு பிரதேந அபிவிருத்தி துறைகளில் தாபிக்கப்பட்ட சுழற்சி நிதிகள் மற்றும் கடன் திட்டங்கள் ஊடாக பங்குபற்றும் கடன் நிறுவனங்களிற்கு (பிசீஐஎஸ்) மீள் நிதியளித்தல் வசதிகள் வழங்கப்படுதலை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களம் (ஆர்டிடி) தொடர்ந்து செய்கின்றது. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 24 சுழற்சி நிதிகள்/ கடன் திட்டங்கள் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 28.4 பில்லியன் வழங்கி பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 20 சுழற்சி நிதிகள்/ கடன் திட்டங்கள் தொடந்து இயங்குகின்றன. மீளாய்வாண்டு இறுதிவரை தொடர்துவரும் சுழற்சி நிதிகள்/ கடன் திட்டங்களில் ஒதுக்கப்பட்ட நிதிகள் ரூபா 18.8 பில்லியனாகும். ஒவ்வொரு சுழற்சி நிதியம்/ கடன் திட்டத்திற்காகவும் வருடாந்தம் தனித்தனியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(அ) தனித்தனியான சுழற்சி நிதிகள்/ கடன் திட்டங்கள் தொடர்ந்தியங்கிய போதிலும் செயற்திட்டங்களின் விளைவை எதிர்பார்க்கப்பட்ட வழிகளில் செயற்திட்ட செயலாற்றல்களை கண்காணிக்கும் நோக்கில் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ‘‘செயற்திட்டத்தின் விளைவு உடன்படிக்கையில் அத்தகைய நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பின் செயற்திட்டங்களின் பூர்த்தியாக்கல் மீது நன்கொடையாளர் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கு மாத்திரம் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது. விளைவு மதிப்பாய்வு நலனாளிகளின் சமூக பொருளாதார அளவைகள் பொறுப்பேற்பதற்கு புறம்பாக கிரயத்தை ஏற்படுத்துகின்றது’’ என்று அறிவித்திருந்தார்.

(ஆ) பாதீடிடப்பட்ட ஒதுக்கீடுகளுடன் 20 சுழற்சி நிதிகள்/ கடன் திட்டங்களின் மீளாய்வாண்டிற்கான உண்மையான நிதிசார் செயலாற்றலை ஒப்பிடும் போது குறித்த தரப்பினருக்கு மீள் நிதிக் கடன்களின் பண அளிப்பில் திருப்திகரமான முன்னேற்றத்தை காட்டியிருக்கவில்லை. அத்தகைய சுழற்சி நிதிகள்/ கடன் திட்டங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| சுழற்சி நிதிகள்/ கடன் திட்டங்கள் | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பண அளிப்புத் தொகை | முரண் | |
|---|---|---|---|---|
| | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| மாகாண அபிவிருத்தி கடன் திட்டங்கள் | 530 | 340 | 190 | 36 |
| வறுமை குறைப்பு சிறு நிதி செயற்திட்டம் II | 904 | 652 | 252 | 28 |
| விவசாய துறை (விஸ்கம்) கடன் திட்டங்களிற்கு கடன் வழங்கும் சட்ட உரிமை | 744 | 524 | 220 | 30 |
| தேயிலை அபிவிருத்தி செயற்திட்ட சுழற்சி நிதியம் (ரீடிபி-ஆர்எவ்) | 300 | 131 | 169 | 56 |

## 3.3 நாணய முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களம் (சீடி) உயர் பெறுமதியிடப்பட்ட நாணயங்களின் மீள் சுழற்சியிலிருந்து வருமானம் உழைக்கும் நோக்கில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ரூபா 5 மற்றும் ரூபா 2 மதிப்புடைய பழைய உயர் பெறுமதியிடப்பட்ட நாணயங்களின் மீள் சுழற்சிக்காக செயற்திட்டமொன்றை தொடங்கியிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 10.75 மில்லியன் நாணயங்களில், ரூபா 5 மற்றும் ரூபா 2 மதிப்புடைய உயர் பெறுமதியிடப்பட்ட நாணயக் குற்றிகள் முறையே ரூபா 3.25 மில்லியன் மற்றும் ரூபா 2.39 மில்லியன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விற்கப்படாது இருந்தன.

இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ‘‘உயர்ந்த மட்டத்திற்கு சர்வதேச உலோக விலைகள் அதிகரிக்கும் வரை மீள் சுழற்சிக்கு எடுப்பதில்லையென்று தீர்மானம் எடுக்கப்பட்டது’’ என்று எனக்கு தெரிவித்திருந்தார்.

(ஆ) பல நினைவுச்சின்ன நாணயக் குற்றிகளின் இருப்பு நகர்வு மிகவும் மெதுவாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆதலால், அவற்றின் மீதான பொதுமக்கள் கேள்வி குறைவைக் காட்டுகின்றது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவறையிலிருந்த அத்தகைய நினைவுச்சின்ன நாணயக் குற்றிகளின் இருப்பு நிலைமை கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | வழங்கிய ஆண்டு | முகப் பெறுமதி<br>ரூபா | அச்சிடப்பட்டட குற்றிகளின் எண்ணிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவறையிலுள்ள குற்றிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2500 பௌத்த ஜயந்தி | 1957 | 5 | 500,000 | 20,168 |
| சனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பதவி ஏற்கின்ற 3 ஆவது ஆண்டு நிறைவு | 1993 | 1 | 2,500 | 803 |
| ஐ.நா சபையின் 50 ஆண்டு நிறைவு | 1995 | 5 | 5,000 | 3,959 |
| இலங்கையின் 50 ஆவது சுதந்திர தினம் | 1998 | 1,000 | 25,000 | 6,685 |
| கிறிகெற் உலக கோப்பை- 1996 | 1999 | 1,000 | 25,000 | 10,164 |
| 2550 பௌத்த ஜயந்தி | 2006 | 2,000 | 10,000 | 8,444 |
| 2550 பௌத்த ஜயந்தி | 2006 | 1,500 | 20,000 | 18,697 |
| கிறிகெற் உலக கோப்பை- 2007 | 2008 | 1,000 | 10,000 | 8,007 |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திடீர் நோய்வாய்ப்படல், பாரிய அறுவைச் சிகிச்சைகள் மற்றும் நீடித்த கால நோய்கள் போன்றவற்றிற்கு கோரிக்கைக்கு தகுதியுடைய அத்தகைய ஊழியர்கள் அல்லது ஓய்வூதியகாரர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய மூன்று மருத்துவ நலன்புரி திட்டங்களின் கீழ் நலன்களை விஞ்சிய அத்தகை சிகிச்சகைளிற்கான கிரயங்கள் காரணமாக நிதிக் கஷ்ரங்களிற்கு முகங்கொடுக்கன்ற இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர் இடர் நிவாரண நிதிய உறுப்பினர்களிற்கு நிதி உதவி வழங்கும் நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர் இடர் நிவாரண நிதியம் (ஈபிடிஆர்எவ்) தாபிக்கப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர் இடர் நிவாரண நிதியத்திற்கான செகரிப்புகள் பயன்பாடற்ற விடயங்களின் விற்பனை, நன்கொடைகள், உறுப்பினர்களின் நுழைவுக் கட்டணங்கள் மற்றும் முதலீட்டு வருமானங்கள் போன்ற அத்தகைய நிதிகளை மாற்றுவதற்கு நாணயச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் அசைவற்ற

சொத்துக்களின் வின்பனை இலாபங்கள் ஊடாக செய்யப்பட்டுள்ளது. நலன்புரியின் பணிப்பாளர் நிதியத்திற்காக புறம்பான கணக்குகளை பேணவேண்டும். 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் மொத்தப் பங்களிப்பு ரூபா 40.18 மில்லியனாக இருந்ததுடன் சேவையிலுள்ளோர் 846 பேரும் 874 ஓய்வூதியக்காரரும் உறுப்பினரின் எண்ணிக்கையாக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர் இடர் நிவாரண நிதிய விதிகளின் பிரகாரம், நலன்புரியின் பணிப்பாளர் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டியதுடன் இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவ கணக்காய்வு பணிப்பாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டியதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வெண்டும். 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நாணயச் சபைக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்திருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(ii) நிதியம் தொடங்கியதிலிருந்து குறித்த நோக்கத்திற்காக நிதிகள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் ரூபா 40.18 மில்லியன் மொத்தப் பங்களிப்பு அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ‘‘இந்த நிதியம் நிதிகளை பயன்படுத்தாமைக்கு குறித்த காரணமாக 2006 யூன் 15 ஆந் திகதிய நாணயச் சபை தீர்மானத்தின்படி, நிதிகளானது ரூபா 100 மில்லியன் அளவை அடையும் வரை பயன்படுத்தப்படக்கூடாது என்தென்பதாகும். எவ்வாறாயினும், நாணயச் சபையானது தற்போது (2013 இல்) மூலதனத்தை பாதுகாப்பதற்கு ரூபா 30 மில்லியனிற்கு இந்த எல்லையை குறைப்பதற்கும் புதிய உறுப்பினர்கள் மற்றும் ஏனைய மூலங்களுடன் காலரீதியாக நிதிகளை அதிகரிப்பதற்கும் தீர்மானத்திருந்தது. ஆகவே, நிதியம் தற்போது ரூபா 30 மில்லியனை விஞ்சியிருந்ததுடன் தற்போது நிதி உதவிகள் தகுதியுடைய உறுப்பினர்களாக்குவதற்கு வழங்கப்பட முடியும். நிலுவையாகவிருக்கும் நிதியம் நிதிகளை பாதுகாப்பதுடன் நிதியத்திற்கு வட்டி வருமானத்தை உழைப்பதற்கு அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.’’ என்று எனக்கு தெரிவித்திருந்தார்.

(ஆ) இலங்கை மத்திய வங்கி பொது முயற்சிகள் குழுவால் (சீஓபிஈ) வழங்கப்பட்ட நெறிப்படுத்தல் மற்றும் 2007 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, வழமைபோல் மீளாய்வாண்டின் போதும் கூட அதன் உத்தியோகத்தர்களின் உழைக்கும் போது செலுத்தும் வரியை செலுத்தியிருந்தது. இலங்கை மத்திய வங்கியால் அதன் ஊழியர்களின் சார்பில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக முறையே ரூபா 138.9 மில்லியன் ரூபா 108.8 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரியை செலுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது இலங்கை மத்திய வங்கியின் சேவையிலுள்ள ஊழியர்கள் 1,495 ஆக இருந்ததுடன் 1,983 ஓய்வுபெற்ற ஊழியர்களுமிருந்தனர்.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய புள்ளி கட்டிடத்தை புதுப்பிப்பிக்கும் நோக்கில், ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் பொறுப்புடையவர்களிடமிருந்து அக்கறையின் வெளிப்பாடு (ஈஓஐ) கோரப்பட்டிருந்தது. அவர்களுடைய அக்கறையை வெளிப்படுத்திய 14 நிறுவனங்களில், 09 நிறுவனங்கள் தகைமையுடையவையாக தெரிவு செய்யப்பட்டிருந்தன. தெரிவுசெய்தல் நடைமுறைக்கு முரணாக, ஈஓஐ சமர்ப்பித்திருக்காத நிறுவனமொன்று தெரிவுசெய்தலிற்கு போதிய காரணங்கலில்லாமல் புதுப்பித்தல் வேலைகளின் ஆலோசனையாளராக தெரிவுசெய்யப்பட்டிருந்தது. மேலும், 2013 மார்ச் வரை அந்த நிறுவனத்திற்கு ரூபா 12,014,920 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தெரிவுசெய்யப்பட்ட ஆலோசனை நிறுவனம் புதுப்பில்தல் வேலைகளிற்கான கிரய மதிப்பீட்டை தயாரிப்பதற்குபொறுப்பாக இருந்ததுடன் அவர்களுடைய கிரய மதிப்பீடு ரூபா 571 மில்லியனாகும். எனினும், மதிப்பீடு பின்னர் திருத்தப்பட்டதுடன் ரூபா 300 மில்லியனாகக் குறைக்கப்பட்டிருந்தது. எனவே, கிரய மதிப்பீட்டின் உண்மைத்தன்மை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்தின் தொழில்தகைமை ஐயத்திற்கிடமாகவுள்ளது. ரூபா 300 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் பின்னர் ரூபா 175 மில்லியனால் விஞ்சியிருந்தது. எவ்வாறாயினும், கிரய மதிப்பீட்டின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) வெயாட்ஸ் கட்டிடத்தின் நிலத்திற்கு ரைலை பொருத்துவதற்கு கேள்விகள் கோரப்படாமலும் கிரய மதிப்பீடுகள் மற்றும் அளவீட்டுப் பட்டியல்களை தயாரிக்காமலும் ரூபா 5,078,514 இற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பொலநறுவை மாவட்டத்தில் சோமாவதி பூங்காவில் இலங்கை மத்திய வங்கியால் சுற்றுலா விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. வனவள பாதுகாப்பு திணைக்களத்துடனான புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின்படி, சுற்றுலா விடுதியின் ஒவ்வொரு வேறு நிர்மாணம், தாபிப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றுடன் ஒன்றிணைப்பதற்கு உடன்பட்டிருந்தது. சுற்றுலா விடுதி மற்றும் வனவள அலுவலகம் என்பவற்றிற்காக இலங்கை மத்திய வங்கியால் முறையே ரூபா 59.8 மில்லியன் மற்றும் ரூபா 6.2 மில்லியன் தொகைகள் செலவழிக்கப்பட்டிருந்தன. 30 ஆண்டுகள் குத்தகை காலத்தின் பின்னர், கட்டிடம் வனவள பாதுகாப்பு திணைக்களத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியின் வசதிகள் பராமரிப்பு திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின்படி, மீளாய்வாண்டின் போது சுற்றுலாவிடுதியில் 52 தடவைகள் மாத்திரம் குடியிருந்ததுடன் தங்குமிட கட்டணமாக ரூபா 386,500 மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

### 3.6 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மத்திய வங்கியால் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் செறிவு குறைகின்ற நிலைமையில் ஆபத்துக்களை மட்டுப்படுத்தும் நோக்கில் மலேசியாவிலுள்ள மத்திய வங்கியுடன் நெஹ்ரா வங்கி, மலேசியா நாணய ஸவப் ஒழுங்கமைப்பிற்காக உடன்படிக்கையொன்று கைசாத்திடப் பட்டிருந்ததுடன் 2009 பெப்ரவரியிலும் மீளாய்வாண்டின் போது ஐ.அ.டொலர் 200 மில்லியன் பெறப்பட்டிருந்தது. உடன்படிக்கையின்படி, ஸவப் கொடுக்கல் வாங்கல்கள் பரஸ்பர உடன்பாடு மூலம் மூன்று மாத காலத்திற்குள் புதுப்பிக்கப்பட வேண்டியதுடன் இலண்டன் இன்ரெபாங்கின் வட்டி மேற்பட்ட வீத (எல்ஐபீஓஆர்) அடிப்படையில் காலாண்டு அடிப்படையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலில் செய்யப்பட்டது. 2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்கள் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை நிறுத்துவனத்தைக் கருத்திற்கொள்ளாமல் 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை நாணய ஸ்வப் கொடுக்கல் வாங்கல்களில் வட்டியாக ரூபா 824.6 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் “உடன்படிக்கையானது 2013 பெப்ரவரி 09 இல் காலாவதியாகியிருந்தது” என்று எனக்கு தெரிவித்திருந்தார்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது இலங்கை மத்திய வங்கி மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் வாகனங்களிற்கான வாகனத் தரிப்பிடமாக அக் காணியை பயன்படுத்துவதற்காக 2000 யூன் 02 இலிருந்து செயற்படும் வண்ணம் ரூபா 100,485,000 செலவழிப்பதன் மூலம் 99 ஆண்டுகள் காலத்திற்காக ட்ரான்ஸ்வேக் சதுக்கத்திலுள்ள 133.98 பேர்ச் காணியை குத்தகையுரிமையில் சுவீகரித்திருந்தது. பின்னர், 2000 ஆம் ஆண்டில் கைசாத்திட்ட குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்யாமல், வெளிநாட்டு முதலீட்டாளருடனான அபிவிருத்தி செயற்திட்டமொன்றை அமுலாக்கும் நோக்கத்துடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் (யூடிஏ) அந்தக் காணித்துண்டு மீள உடமையாக்கப்பட்டது. மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது குத்தகை கொடுப்பனவை தீர்க்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியுடன் புதிய உடன்படிக்கையொன்றை கைசாத்திட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான குத்தகையுடமை காணியின் ஏட்டுப்பெறுமதி ரூபா 88,558,750 ஆகும். இலங்கை மத்திய வங்கியினுடைய மதிப்பீட்டின் பிரகாரம், காணியின் சந்தைப் பெறுமதி ஏறத்தாழ ரூபா 1,200 மில்லியனாகும். இருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அல்லது முதலீட்டாளரிடமிருந்து பெறவேண்டிய தொகையின் அறவீட்டுத் தன்மை இலங்கை மத்திய வங்கியால் செய்யப்பட்ட பேச்சுவார்த்தையின் நிட்சயமின்மை காரணமாக ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(இ) இலங்கை மத்திய வங்கியானது பொது நிர்வாக அமைச்சின் அரசாங்க மதிப்பீட்டாளரால் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 500 மில்லியனிற்கு கொழும்பு- 1, பரோன் ஜயத்திலக்க மாவத்தையில் (வைற் எவேய்ஸ் கட்டிடம்) கட்டிடமொன்றை கொள்வனவு செய்திருந்ததுடன் கட்டிடத்தின் புதுப்பித்தலிற்காக ரூபா 13.67 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவு திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்கு மேல் காலாவதியான பின்னர் கூட 2013 ஒக்தோபர் மாத இறுதிவரை கட்டிடத்தின் சட்டரீதியான உரித்துடமை இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ர முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட தீர்மானத்தின்படி, இக்கட்டிடத்தின் சுவீகரிப்பு நோக்கம் ஆபத்து முகாமைத்துவ அளவீடாக தனியான அமைவிடத்தில் மேலதிக வளவுகளை வைத்திருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் சில திணைக்களங்களின் விரிவாக்கலிற்கும் வசதியளிக்கப்பட்டிருந்ததகும். இருந்தபோதிலும், இலங்கை மத்திய வங்கியின் பிரதான கட்டிடத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு மேலதிக கட்டிட வசதி இருந்தமையாலும் ஏற்கனவே இரண்டு கட்டிடங்கள் தனித்தனியாக சுவீரிக்கப்பட்டிருந்தமையாலும் ஆபத்து முகாமைத்துவ அளவீட்டு நோகத்திற்காக இன்னொரு கட்டிடத்தை சுவீகரிக்கும் தீர்மானம்

கேள்விக்குரியதாகும். இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ‘‘இலங்கை மத்திய வங்கியின் நடுத்தர மற்றும் நீணடகால விரிவாக்கல் செய்வதற்கு கட்டிடம் சுவீகரிக்கப்பட்டிருந்தது’’ என்று எனக்கு தெரிவித்திருந்தார்.

(ஈ) 2011 சனவரி 10 இல் நாணயச் சபையால் வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியானது ஐ.அ.டொலர் 5,807,116 இற்கு நியூயோக்கில் கட்டிடமொன்றை கொள்வனவு செய்திருந்ததுடன் கட்டிடத்தின் புதுப்பிப்பு வேலைக்காகவும் ஐ.அ.டொலர் 400,000 செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நாணயச் சட்ட அதிகாரச் சட்டத்தின் 117 ஆம் பிரிவிற்கு முரணாக, இக்கட்டிடம் ஐ.அ.டொலர் 68,000 மாதாந்த வாடகையில் 2012 யூன் 01 தொடங்கம் மூன்று ஆண்டு காலத்திற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது.